සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

44 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**

- ❊ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை*** எழுதுக.
- ❊ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ❊ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. பர்ளான தொழுகைக்குரிய நேரத்தை அறிவது
   (1) பர்ளு (2) ஸுன்னத் (3) ஷர்த்து (4) முபாஹ் (5) வாஜிப்

2. அஜ்னபியான பெண்ணுடன் தனித்திருப்பது
   (1) ஹராம் (2) மக்ரூஹ் (3) ஜாஇஸ் (4) மன்தூப் (5) முஸ்தஹப்

3. ஹதீஸ் துறையில் நிபுணத்துவம் பெற்றவரைக் குறிக்கும் சொல்
   (1) முபஸ்ஸிர் (2) முஹத்திஸ் (3) முஜ்தஹித் (4) முஜத்தித் (5) முத்தகீ

4. ஜாலூத் மன்னனுடன் தொடர்புடைய நபி
   (1) இப்ராஹீம் (2) மூஸா (3) சுலைமான் (4) தாவூத் (5) ஈஸா

5. இப்ராஹீம் (அலை) அவர்களின் தஃவாவுக்குத் தடையாக இருந்தவன்
   (1) பிர் அவ்ன் (2) ஹாமான் (3) நம்ரூத் (4) கைஸர் (5) ஸாமிரி

6. உம்ராவில் **இடம்பெறாத** செயல்
   (1) இஹ்ராம் (2) ஸஈ (3) தவாப்
   (4) ஹல்க் (5) அறபாவில் தரித்தல்

7. மக்ரிபையும் இஷாவையும் மக்ரிபுடைய நேரத்தில் முற்படுத்திச் சேர்த்துத் தொழுதல்
   (1) ஜம்உ கஸ்ர் (2) ஜம்உ (3) கஸ்ர்
   (4) ஜம்உ தக்தீம் (5) ஜம்உ தஃகீர்

8. அதிகமான ஹதீஸ்களை ரிவாயத் செய்த பெண்மணி
   (1) உம்மு ஸல்மா (ரலி) (2) உம்மு ஹபீபா (ரலி) (3) உம்மு குல்ஸூம் (ரலி)
   (4) அஸ்மா (ரலி) (5) ஆயிஷா (ரலி)

9. உடலாலும் பொருளாலும் இடம்பெறும் இபாதத்
   (1) கலிமா (2) தொழுகை (3) நோன்பு (4) ஸகாத் (5) ஹஜ்

10. 'உம்முல் குர்ஆன்' எனப்படும் ஸூரா
    (1) ஸூரா பாத்திஹா (2) ஸூரா வாகி ஆ (3) ஸூரா முல்க்
    (4) ஸூரா இக்லாஸ் (5) ஸூரா யாஸீன்

11. ஒருவர் தனது வேலையை நிறைவேற்றுவதற்கு தனக்குப் பதிலாக மற்றொருவரை அமர்த்தலைக் குறிக்கும் சொல்
    (1) இஜாரா (2) திஜாரா (3) வக்பு
    (4) வஸீலா (5) வகாலா

12. இஸ்லாத்தில் அவதூறு கூறியதற்கான தண்டனை
    (1) கசையடி (2) நாடுகடத்தல் (3) கரச்சேதம்
    (4) சிரச்சேதம் (5) சிறையிலடைத்தல்

[பக். 2 ஐப் பார்க்க

13. இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் பின்பற்றும் மத்ஹப்
(1) ஹனபி (2) ஷாபிஈ (3) மாலிகி
(4) ஹம்பலி (5) ளாஹிரி

14. சித்திலெப்பை இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காகப் பிரசுரித்த பத்திரிகையின் பெயர்
(1) புதினாலங்காரி (2) முஸ்லிம் பாதுகாவலன் (3) முஸ்லிம் நேசன்
(4) அஸ்ராருல் ஆலம் (5) அஸ்ஸவாப்

15. கலீபா உஸ்மான் (ரலி) அவர்கள் 'ஜாமிஉல் குர்ஆன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதற்கான காரணம்
(1) அல்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்தவராக இருந்தமை
(2) குத்தாபுல் வஹீகளுள் ஒருவராக இருந்தமை
(3) அல்குர்ஆனைப் பிரதிபண்ணும் பணிக்குப் பணித்தமை
(4) குர்ஆனின் மூலம் மக்களை ஒன்றுபடுத்தியமை
(5) குர்ஆன் பிரதிகள் சிலதை எரிக்கச் செய்தமை

16. முஜ்தஹித்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இஜ்மா
(1) இஜ்மா அக்ஸரிய்யா (2) இஜ்மா உஸ் ஸுகூதி (3) இஜ்மா கவ்லி
(4) இஜ்மா ஸரீஹ் (5) இஜ்மா முரக்கப்

17. இலங்கை முஸ்லிம்களிடையே விவாகரத்து அதிகரித்துச் செல்வதற்கான காரணம்
(1) தலாக்கை இலகுவாகப் பெற முடிதல்
(2) வெளிநாட்டு வேலைவாய்ப்பு அதிகரித்தல்
(3) தொடர்பு சாதனங்களின் செல்வாக்கு விரிவடைந்திருத்தல்
(4) பிற கலாசாரத் தாக்கத்தினால் பாதிக்கப்படுதல்
(5) கணவன் மனைவியரிடையே ஏற்படும் முரண்பாடு

18. வாசில் பின் அதா பற்றிய **தவறான** கூற்று
(1) முஃதஸிலா இயக்கத்தின் ஸ்தாபகர்.
(2) ஹஸனுல் பஸ்ரியின் மாணவர்.
(3) பஸ்ராவில் கல்வி கற்றவர்.
(4) பெரும்பாவம் செய்தோரை காபீர் என்றவர்.
(5) குர்ஆன் படைக்கப்பட்டது எனக் கூறியவர்.

19. இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - ரீ.பீ.ஜாயா சுதந்திரப் போராட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக நின்று ஆற்றிய பங்களிப்பு
B - இலங்கையின் உற்பத்திப் பொருள்களை சர்வதேச சந்தைகளில் அறிமுகப்படுத்தியமை
C - இலங்கை மன்னர்களின் தூதர்களாக வெளிநாடுகளுக்குச் சென்றமை
D - தவளம் போக்குவரத்து முறையின் காரணமாக புதிய பாதைகள் உருவாகியமை
E - போர்த்துக்கேயரை வெளியேற்ற மாயாதுன்னயுடன் சேர்ந்து போராடியமை
மேற்குறிப்பிட்டவற்றுள் முஸ்லிம்கள் நாட்டின் இறைமைக்குப் பங்களிப்புச் செய்த தொகுதி
(1) ACE (2) ADE (3) BCD (4) BED (5) CDE

20. மதீனா சாசனம், அகபா உறுதிமொழி, ஹுதைபியா உடன்படிக்கை என்பன எந்தெந்த வகுப்பாருக்கிடையில் செய்துகொள்ளப்பட்டன என்பதைக் குறிக்கும் சரியான ஒழுங்கு
(1) அவ்ஸ்-கஸ்ரஜ், அஹ்லுல் கிதாப், குறைஷிக்காபிர்
(2) அஹ்லுல் கிதாப், குறைஷிக்காபிர், அவ்ஸ்-கஸ்ரஜ்
(3) குறைஷிக்காபிர், அஹ்லுல் கிதாப், அவ்ஸ்-கஸ்ரஜ்
(4) அவ்ஸ்-கஸ்ரஜ், குறைஷிக்காபிர், அஹ்லுல் கிதாப்
(5) அஹ்லுல் கிதாப், அவ்ஸ்-கஸ்ரஜ், குறைஷிக்காபிர்

21. இஸ்லாம் அனுமதித்த பொருளாதார நடவடிக்கைகளில் வாடகைக்கு விடுவதும் ஒன்றாகும். வாடகை என்பதன் அரபுச் சொல்
(1) முஷாரகா (2) இஜாரா (3) முழாரபா
(4) கர்ள் (5) ரிபா

22. 'அஸ்லில்' காணப்படும் பொதுத் தன்மையும் 'பர்உவில்' காணப்படும் பொதுத் தன்மையும் சமநிலையில் காணப்படுவதைக் குறிப்பது
(1) கியாஸ் அல் அத்னா (2) கியாஸ் அல் அவ்லா (3) கியாஸ் அல் முஸாவி
(4) கியாஸ் அல் ஜாலீ (5) கியாஸ் அல் கபீ

[பக். 3 ஐப் பார்க்க

23. ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தையல் மெஷின்கள் தேவைப்படுகின்றன. முஸ்லிம் வங்கிக்குச் சென்று அதனைப் பெறுவதாயின் அதற்குப் பொருத்தமான வணிக முறை
(1) முழாரபா (2) முராபஹா (3) முஸாரஆ
(4) வகாலா (5) ரஹ்ன்

● 24 முதல் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் X, Y என்னும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. X நிரலில் உள்ளவை Y நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுடன் சரியாக ஒழுங்குபடுத்தும்போது **சரியாக** அமையும் சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

24.

| X | Y |
|---|---|
| (i) ஹிஜ்ரி 80 | A இமாம் மாலிக் |
| (ii) ஹிஜ்ரி 93 | B இமாம் அபூஹனீபா |
| (iii) ஹிஜ்ரி 150 | C இமாம் புகாரி |
| (iv) ஹிஜ்ரி 194 | D இமாம் ஷாபிஈ |

(1) A B C D (2) A C D B (3) B A D C (4) B D C A (5) C A D B

25.

| X | Y |
|---|---|
| (i) ஜாமிஉல்பயான் | A ஸெய்யித் குத்ப் |
| (ii) தப்ஸீர் மனார் | B ஸமக்ஷரீ |
| (iii) பீ ழிலாலில் குர்ஆன் | C ரஷீத் ரிழா |
| (iv) அல் கஷ்ஷாப் | D ஜரீர் அத்தபரீ |

(1) A B C D (2) B D C A (3) C D B A (4) D A C B (5) D C A B

26. முனபிகுகளின் அடையாளங்களைக் காட்டும் தொகுதி
(1) பொய் பேசுதல், புறம்பேசுதல், நம்பிக்கைத் துரோகம்
(2) வாக்கு மீறல், கோள் சொல்லுதல், அவதூறு சொல்லல்
(3) தகாத வார்த்தைகளால் பேசுதல், பொய் பேசுதல், புறம்பேசுதல்
(4) கோள் சொல்லல், நம்பிக்கைத் துரோகம், மோசடி செய்தல்
(5) வாக்கு மீறல், பொய் பேசுதல், நம்பிக்கைத் துரோகம்

27. இஸ்லாம் தொடர்பாக சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - இஸ்லாம் நெகிழும் தன்மை கொண்டது.
B - இஸ்லாம் முழு மனித சமுதாயத்திற்கும் உரியது.
C - உலக வாழ்வை அனுபவிக்க மனிதனுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
D - இஸ்லாம் வாழ்வின் சில துறைகளுக்கு மட்டும் வழிகாட்டுகின்றது.
E - இஸ்லாம் மனித சிந்தனையிலன்றி அனைத்தையும் பொதிந்த இறைவனின் நாட்டத்தில் உருவானது.
F - அல்லாஹ்வின் அருள் முஸ்லிம்களுக்கு மட்டுமே உரியது.
இவற்றுள் இஸ்லாம் தொடர்பான சரியான கருத்துக்களைக் கொண்ட தொகுதி
(1) A B C (2) A D F (3) B C E (4) C E F (5) D E F

28. இஸ்லாத்துடன் தொடர்புடைய பல்வேறுபட்ட சிந்தனையாளர்களின் சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - மனிதன் செயல் சுதந்திரமற்றவன்.
B - குர்ஆன் படைக்கப்படவில்லை.
C - மனிதன் பூரண செயல் சுதந்திரமுடையவன்.
D - அல்லாஹ் நல்லதை மட்டுமே நாடுகின்றான்.
E - பாவம் செய்தவன் முஃமினுமல்லன், காபிருமல்லன்.
F - அல்லாஹ்வை மறுமையில் காணமுடியாது.
இவற்றுள் முஃதஸிலாக்களின் சிந்தனைக்குரியவை
(1) A B C (2) A D B (3) B C D (4) B E F (5) C D E

29. இறைதூதரின் வருகை தொடர்பான சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - முன்னைய இறைதூதர்களின் போதனைகள் திரிக்கப்பட்டிருத்தல்.
B - முன்னைய இறைதூதர்களின் போதனைகள் முழுமை பெறாதிருத்தல்.
C - முன்னைய இறைதூதர் மரணமடைதல்.
D - முன்னைய இறைதூதர்களின் போதனைகள், குறித்த சமூகத்துக்கும் காலத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.
E - முன்னைய இறைதூதர்களின் போதனைகளை மக்கள் ஏற்காமை.
F - மக்கள் பாவத்தில் மூழ்கியிருத்தல்.
ஓர் இறைதூதருக்குப் பின்னர் மற்றோர் இறைதூதர் வருவதற்கான நியாயங்கள் அடங்கிய தொகுதி
(1) A B C (2) A B D (3) A B E (4) A B F (5) A E F

[பக். 4 ஐப் பார்க்க

8040

30. இலங்கையில் அரபுக் குடியேற்றங்கள் தோன்றியமைக்கான சில காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - காலித் இப்னு பகாயாவின் வருகை
   B - இலங்கையில் வாசனைத் திரவியங்கள் பெருமளவில் காணப்பட்டமை
   C - பாதுகாப்பான துறைமுக வசதிகள்
   D - இலங்கை மன்னர்களின் ஆதரவு
   E - பனுஹாஷிமீகளின் வருகை
   F - இலங்கை அரபு வணிகத்தின் பாதையில் அமைந்திருந்தமை

   இஸ்லாத்துக்கு முன்பிருந்தே இலங்கையில் அரபுக் குடியேற்றம் தோன்றியதற்கான காரணங்களைத் தெரிவுசெய்க.
   (1) A B C D (2) B C D E (3) B C D F (4) B C E F (5) C D E F

31. அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் நிறைவேற்ற வேண்டிய இபாதத், கிலாபத், இமாரத் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.
   A - மரங்கள் அழியாது பாதுகாத்தல்
   B - உலகில் இறை சட்டங்களை நிலைநாட்டல்
   C - தொழுகை முதலான கடமைகளைச் சரியாக நிறைவேற்றல்
   D - மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
   E - சுற்றாடல் மாசுபடாமல் பாதுகாத்தல்

   இவற்றுள் இமாரத் பணிகளை மாத்திரம் உள்ளடக்கும் தொகுதி
   (1) A B (2) A E (3) B C (4) B D (5) C D

- இலக்கம் **32 - 35** வரையுள்ள பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களில் ஒன்று ஏனைய சொற்களுடன் உடன்படாது தனித்து நிற்கும் சொல்லாக உள்ளது. அந்த **உடன்படாத** சொல்லைத் தெரிந்து குறிப்பிடுக.

32. (1) இல்முல் பராஇழ் (2) இல்முல் மீராஸ் (3) இல்முல் அக்லிய்யா
   (4) இல்முல் நக்லிய்யா (5) இல்முல் ஹதீஸ்

33. (1) லிஆன் (2) ஈலாஉ (3) தலாக்
   (4) இத்தா (5) குல்உ

34. (1) முல்ஹித் (2) முஷ்ரிக் (3) காபிர்
   (4) முபஸ்ஸிர் (5) முனாபிக்

35. (1) இப்ரீட் (2) ஸுலைமான் (3) ஜிப்ரீல்
   (4) இஸ்ராயீல் (5) யஃகூப்

36. பின்வரும் ஆசிரியர்கள், மாணவர்களில் ஒரே மத்ஹபைச் சார்ந்த ஆசிரியரினதும் மாணவரினதும் பெயர்களைத் தெரிவுசெய்க.
   (1) இமாம் ஷாபிஈ, இமாம் மாலிக் (2) இமாம் மாலிக், இமாம் ஹம்பல்
   (3) இமாம் ஷாபிஈ, இமாம் ஹம்பல் (4) இமாம் ஹம்பல், இமாம் அபூஹனீபா
   (5) இமாம் அபூஹனீபா, இமாம் அபூயூஸுப்

37. 'பற்றற்ற வாழ்வைக்' குறிக்கும் சொல்
   (1) வரஉ (2) ஸுஹ்த் (3) ரிழா
   (4) தவக்குல் (5) மஹப்பா

38. தற்காலிக மஹ்ரமியாக கருதப்படுபவர்
   (1) தந்தையின் சகோதரி (2) மனைவியின் தாய் (3) தாயின் சகோதரி
   (4) மனைவியின் சகோதரி (5) மகனின் மனைவி

39. இஸ்லாமிய தண்டனை முறைபற்றிக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களில் **அடங்காதது**. அத்தண்டனைகள்
   (1) காலம் கடந்ததும் இன்றைய உலகிற்குப் பொருத்தமற்றதும்.
   (2) மனிதாபிமானமற்றது.
   (3) தனிமனித நலனைவிட சமூக நலனுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.
   (4) மிகக் கொடூரமானது.
   (5) தனிமனித நலனை பாதுகாக்கத் தவறுகின்றது.

40. 'ஸஹீஹ் புகாரி' என்ற ஹதீஸ் நூலின் ஆசிரியர்
   (1) முஹம்மத் இப்னு யஸீத் (2) முஹம்மத் இப்னு இஸ்மாயில் (3) அஹ்மத் இப்னு ஹம்பல்
   (4) மாலிக் இப்னு அனஸ் (5) நுஃமான் பின் தாபித்

[பக். 5 ஐப் பார்க்க

● **41 - 50** வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுகளுக்குக் கீழேயுள்ள (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானது எது என்பதைத் தெரிந்து, அதன் **இலக்கத்தைப்** பல்தேர்வு விடைப் பத்திரத்தில் அடையாளமிடுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 41. | நல்லெண்ணம் ஹராமை நியாயப்படுத்தாது. | மாற்றுவழி இல்லாதவிடத்து தடுக்கப்பட்டவையும் அனுமதிக்கப்படும். |
| 42. | முஸைலமா, நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் ஆவான். | நபியவர்கள் அனுப்பிய படையால் முஸைலமா கொலை செய்யப்பட்டான். |
| 43. | நல்ல நோக்கத்திற்காக ஹராமான ஒன்றைச் செய்வதில் தவறில்லை. | ஹராத்தைத் தவிர்ப்பதற்காக சந்தேகமான ஒன்றைப் பயன்படுத்துவதிலிருந்து தவிர்க்க வேண்டும். |
| 44. | ஆண்கள் தொழுகையின் போது மட்டும் அவ்ரத்தை மறைக்க வேண்டும் என்பது கட்டாயமாகும். | பெண்கள் தமது பெற்றோர், பிள்ளைகள் முன்னிலையில் ஹிஜாப் அணிதல் வேண்டும். |
| 45. | 'பத்ஹுத்தையான்', 'மஆனி' போன்ற நூல்கள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களால் எழுதப்பட்டன. | மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் நூல்கள், தப்ஸீர் மற்றும் வரலாற்றுத் துறை சார்ந்தவை. |
| 46. | ஸிப்பீன் யுத்தத்தைத் தொடர்ந்து கவாரிஜ்கள் தோன்றினர். | ஸெய்திகள், ஷீ ஆக்களில் மிதவாதக் கொள்கை உடையோராகக் கொள்ளப்படுகின்றனர். |
| 47. | ஹதிஸ்களில் முதன்மைப்படுத்தப்பட்டவை 'முதவாதிர்' எனப்படுகின்றன. | முதவாதிரான ஹதீஸ்கள் ஸஹீஹ், ஹஸன் என இரு வகைப்படும். |
| 48. | உமர் (ரலி) அவர்களின் காலத்தில் குறைகளை விசாரிக்கும் அதிகாரியாக முஹம்மத் இப்னு மஸ்லமா பணியாற்றினார். | அபூபக்கர் (ரலி) அவர்களின் காலத்தில் உமர் (ரலி) அவர்கள் மதீனாவில் நீதிபதியாகப் பணியாற்றினார். |
| 49. | அல்லாஹ்வின் தூதருக்குப் பிரத்தியேகமாக வழங்கப்பட்ட சிறப்பம்சங்களையும் நாம் பின்பற்ற வேண்டும். | நபியவர்களின் தூதுத்துவத்தை உறுதிசெய்வதற்காக அல்லாஹ் குர்ஆனை வழங்கினான். |
| 50. | 'அல்லாஹ்வின் நாட்டமின்றி எதுவும் நிகழ்வதில்லை. அவனது நாட்டப்படியே எல்லாம் நிகழ்கின்றன. அதில் வேறு எந்த சக்தியும் குறுக்கிட முடியாது' என்பது அஹ்லுஸ்ஸுன்னாக்களின் நிலைப்பாடாகும். | பூமியிலோ வானத்திலோ உள்ளவற்றில் ஓர் அணுவளவாகினும் (நபியே) உமது இறைவனுக்குத் தெரியாமல் மறைந்துவிடுவதில்லை. இதைவிடச் சிறிதாயினும் அல்லது பெரிதாயினும் விளக்கமாக அவனது புத்தகத்தில் பதிவு செய்யப்படாமல் இல்லை. குர்ஆன் 10:61 |

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி I இல் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒரு வினாவின் சரியான விடைக்கு **20** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி I

**1.** "ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கட்டாயக் கடமைகள் ஐந்து உள்ளன."

(i) ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய கட்டாய கடமைகளுள் **நான்கைக்** குறிப்பிடுக.

(ii) அவற்றுள் நீர் விரும்பிய **ஒன்றைத்** தெரிந்து, சுருக்கமாக விபரிக்குக.

(iii) மேலே (ii) இல் நீர் விபரித்த கடமையை நிறைவேற்றுவதால் உமது வாழ்க்கையில் நீர் அடையும் பயன்களை விளக்குக.

(iv) குறித்த கடமையை நிறைவேற்றுவதால் இவ்வுலகிலும் மறுஉலகிலும் நீர் பெறும் நன்மைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

**2.** பின்வரும் விடயங்களைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

(i) இஸ்லாத்தின் மூலாதாரங்களில் காணப்படும் தனித்துவம்

(ii) மனிதன் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு

(iii) வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஹலால், ஹராம் நோக்குதல்

(iv) இஸ்லாத்தில் பெண்ணுரிமை

**3.** ஸுன்னா பற்றி பின்வரும் தலைப்புகளில் விளக்குக.

(i) ஸுன்னாவின் முக்கியத்துவம்

(ii) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ஸுன்னா பாதுகாக்கப்பட்ட முறை

(iii) மவ்ழூஆத் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங்கள்

(iv) மவ்ழூஆத்தை இனங்காண்பதற்காக முஹத்திஸீன்கள் கையாண்ட வழிமுறைகள்

## பகுதி II

**4.** நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் வளர்ச்சியில் பின்வருவனவற்றின் பங்களிப்புகளை விளக்குக.

(i) மஸ்ஜிதுந்நபவி

(ii) நபி (ஸல்) அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகள்

**5.** (i) இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியபின் அது வளர்ந்த விதத்தை எடுத்துக்காட்டுக.

(ii) இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களித்த விதத்தை விளக்குக.

**6.** நம்பிக்கைக் கோட்பாடுகளுக்கு பின்வருவனவற்றின் அவசியத்தை அல்குர்ஆன் ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக.

(i) தவ்ஹீத்

(ii) ரிஸாலத்

**7.** முஆமலாத் தொடர்பாக பின்வரும் விடயங்களை ஒப்பிட்டு விளக்குக.

(i) முஷாரகா - முழாரபா

(ii) வஸிய்யத் - வராஸத்

**8.** குடும்ப வாழ்வைச் சீரமைத்துக் கொள்வதில் பின்வருவனவற்றின் பங்கை எடுத்துக்காட்டுக.

(i) நிகாஹுக்கு முந்திய ஆயத்தங்கள்

(ii) பிள்ளை வளர்ப்பில் கவனிக்க வேண்டிய அம்சங்கள்

* * *